

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. செஞ்சி, அனந்தபுரத்தில் இறுதி கட்ட பிரச்சாரத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.




திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர், ஜி.ஆர்.வசந்தவேலை ஆதரித்து, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. உளுந்தூர்பேட்டையில் இறுதி கட்ட பிரச்சாரத்தை மேற்கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியின் 5 ஆண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைத்து, உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார். இதில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### அத்துமீறும் தேர்தல் ஆணையம்:

# அதிகாரிகளை மாற்றலாம் - வாக்காளர்களை மாற்ற முடியுமா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கேள்வி!



சென்னை, ஏப். 23-

அதிகாரிகளை மாற்றலாம் - வாக்காளர்களை மாற்ற முடியுமா? என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் கேள்வியெழுப்பி அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சட்டமன்றத் தேர்தல்கள் நடைபெறும் அய்ந்து மாநிலங்களில் தமிழ்நாடு, மேற்கு வங்கம் ஆகிய இரு மாநிலங்கள் மீது ஒன்றிய ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. அரசு குறி வைத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நடுநிலைமைக்குப் ‘பேர் போன’ தேர்தல் ஆணையமோ, இந்த இரு மாநிலங்களில் மட்டும் தொடர்ந்து அதிகாரிகளை மாற்றிக் கொண்டே இருக்கிறது. முதலில் மாவட்ட ஆட்சியர், காவல்துறை கண்காணிப்பாளர் என்று தொடங்கி, டி.அய்.ஜி, ஏ.டி.ஜி.பி, என்று வரிசையாக மேலேறி, டி.ஜி.பி., உள்துறைச் செயலாளர், தலைமைச் செயலாளர் என்று மாற்றிக் கொண்டே இருந்தார்கள். இதில் தி.மு.க. சார்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட பின்னர், தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப் பட்ட பா.ஜ.க.வுக்குச் சார்பான காவல்துறை அதிகாரியின் நியமனம் திரும்பப் பெறப்பட்டது.

இந்த இந்த அதிகாரிகளை மாற்ற வேண்டும் என்று எங்கிருந்தெல்லாம் ஆணை வருகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான்! பார்ப்பன ‘இனமலர்’ பத்திரிகையொன்று ஒரு காவல்துறை அதிகாரியை மாற்றவில்லையே என்று எழுதுகிறது மறுநாளே அவர் மாற்றப்படுகிறார்.

முதலமைச்சரின் தனிச் செயலர் உமாநாத் அய்.ஏ.எஸ். போன்ற துடிப்புமிக்கவர்கள் மீது தேர்தல் விதிமீறல் என்று குற்றம் சாட்டினார்கள். அவ்வழக்கு இன்று (22.4.2026) உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**அதிகார அத்துமீறல் இல்லையா?**

தலைமைச் செயலாளரை மாற்றுவதற்கெல்லாம் அதிகாரமே இல்லாத தேர்தல் ஆணையம், அதிகாரிகளை மாற்றுவதை நிறுத்தவில்லை. இது அதிகார அத்துமீறல் இல்லையா?

நாம் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டங்களில் குறிப்பிட்டதை இங்கும் நினைவுகூர விரும்புகிறோம்.

தேர்தல் ஆணையம் அதிகாரிகளை மாற்றலாம். வாக்காளர்களை மாற்ற முடியுமா? குஜராத்திலிருந்தும், பீகாரிலிருந்தும் வாக்காளர்களைக் கொண்டு வந்து இறக்குவார்களா?

**அரசு இயந்திரத்தை இன்னலுக்கு உள்ளாக்குவோர் யார்?**

அதிகார வரம்புகளை மீறுவோர் யார்? அரசு இயந்திரத்தை இன்னலுக்கு உள்ளாக்குவோர் யார்? என்பதையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

அனைத்துக்கும் சேர்த்துத் தான் தீர்ப்பளிப்பார்கள், காத்திருப்போம்!

# செஞ்சி, அனந்தபுரத்தில் - செஞ்சி மஸ்தான் இறுதி கட்ட தேர்தல் பிரச்சாரம்!

செஞ்சி, ஏப். 23-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.க. சார்பில் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார்.

உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. செஞ்சி அனந்தபுரம் பேரூராட்சியில் தனது இறுதி கட்ட தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

ஒரு பக்கம் கடும் வெயிலை பொருட்படுத்தாமல் அனல் பறக்கும் விதமாக பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். இன்று (23 ம் தேதி) வாக்கு பதிவு என்பதால் செஞ்சி, அனந்தபுரத்தில் அவர் சூராவளி இறுதிகட்டம் பிரச்சாரம் மேற்கொண்டார்.

செஞ்சி சிங்கவரம் சாலைமாதா கோவிலில் இருந்து பிரச்சார ஊர்வலம் தொடங்கியது. ஊர்வலத்தில் தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிங்கவரம் சாலை, காந்தி பஜார், பஸ் நிலையம், கூட்ரோடு வரைபிரச்சார வாகனத்தில் நின்றபடி வாக்காளர்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்

அப்போது அவர் ஆட்சியை குறைகூறமுடியாத அளவிற்கு பல எண்ணற்ற சாதனைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்துள்ளார். தடையின்றி ரேஷன் கடைகளில் பொருட்கள் விநியோகம், வீடு இல்லாதவர்க்கு கலைஞர் கனவு இல்லம், கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ ஆயிரம், உங்கள்வீட்டுகுழந்தைகளுக்கு காலை உணவு திட்டம், இல்லத்தரசிகளுக்கு மாதந்தோறும் ரூ. ஆயிரம் ஆட்சிக்கு வந்தவுடன் ரூ.2 ஆயிரமாக உயர்த்தப்பட உள்ளது. தடையின்றி முதியோர் உதவித்தொகை, கட்டணமில்லா பேருந்து, மகளிர் சுய உதவிக்கடன் என எண்ணற்ற சாதனைகளை சொல்லிக்கொண்டே போகலாம், மேலும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் குடும்ப தலைவிகளுக்கு ரூ. 8 ஆயிரம் கூப்பன் வழங்கப்படும். உங்களுக்கு பிடித்த, தேவையான பொருட்களை எடுத்துக் கொள்ளலாம். எனவே சொன்னவாக்குறுதிகளை செய்யும் ஆட்சி தி.மு.க. இந்த திட்டங்கள் அனைத்தும் தொடரவும், மேலும் பல திட்டங்கள் மூலம் தமிழக மக்கள் பயன்பெறவும், உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்துஎன்னை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச்செய்ய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.


முன்னதாக அனந்தபுரத்தில் பிரச்சார வாகனத்தில் தி.மு.க. வேட்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வாக்கு சேகரித்தார்.

இதில்செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மேல்மலையனூர் ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன், நகர செயலாளர்கள் சம்பத் கார்திக், அவைத் தலைவர் கல்யாண் குமார், பேரூராட்சி மன்ற தலைவர் செஞ்சி மொக்தியார் அலி மஸ்தான், அனந்தபுரம் முருகன், தோழமைக் கட்சி நிர்வாகிகள் ரங்க பூபதி, தயாநிதி, சிவா, சையத் உஸ்மான் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### 5 கோடியே 73 இலட்சம் வாக்காளர்கள் !

# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - இன்று வாக்குப் பதிவு!

## காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறுகின்றது!



சென்னை, ஏப். 23 -

தமிழ்நாட்டில் இன்று ஒரே கட்டமாக வாக்குப் பதிவு நடைபெறுகிறது. மொத்தமுள்ள 234 தொகுதிகளில் நான்காயிரத்து 23 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இன்று (23.04.2026) காலை 7 மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை 6 மணி வரை நடைபெற உள்ளது.

மொத்தமுள்ள 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடி மையங்களுக்கும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டுள்ளன. தேர்தல் பணியில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், காவலர்கள் என 4 லட்சத்து 25 ஆயிரம் பேர் ஈடுபட உள்ளனர். 350 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் 32 ஆயிரம் பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.


பதற்றமான வாக்குச் சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. 2 கோடியே 80 லட்சம் ஆண் வாக்காளர்கள் மற்றும் 2 கோடியே 93 லட்சம் பெண் வாக்காளர்கள் என மாநிலம் முழுவதும் மொத்தமாக 5 கோடியே 73 லட்சம் பேர் வாக்களிக்க உள்ளனர். இன்று பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி வாக்கு எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளது.

சட்டமன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதாக தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், தெரிவித்துள்ளார்.

### கிராம ஊராட்சிகளில் 100 நாள் வேலைத்திட்டத்தை முடக்க நினைக்கும்

# பா.ஜ.க. விற்கும், துணை போகும் அ.தி.மு.க. கூட்டணிக்கும் தக்க பாடம் புகட்ட வேண்டும்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள்!



திண்டுக்கல், ஏப்.23 -

திண்டுக்கல் நகருக்கு வைகை அணையிலிருந்து குடி தண்ணீர் கொண்டு வரப்படும் என்று திண்டுக்கல் ஒன்றியம் பாடியூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் ஐ. பெரியசாமி பேசி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். கிராம ஊராட்சிகளில் 100 நாள் வேலைத்திட்டத்தை முடக்க நினைக்கும் பா.ஜ.க.விற்கும், துணை போகும் அ.தி.மு.க. கூட்டணிக்கும் தக்க பாடம் புகட்ட வேண்டும் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள் விடுத்தார்.

திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பாக போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஐ.பி. செந்தில்குமாரை ஆதரித்து தி.மு.க. மாநில துணைப் பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி திண்டுக்கல் தொகுதிக்குட்பட்ட பாடியூர், பாறையூர், பெரியகோட்டை, பாலகிருஷ்ணாபுரம், மாலைப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு சென்று, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். பாடியூரில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ. பெரியசாமி, திண்டுக்கல் நகருக்கு காவிரி கூட்டுக்குடிநீர் தந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்றார். திண்டுக்கல் மாவட்டத்தில் தி.மு.க. ஆட்சியின்போது வழங்கப்பட்ட முதியோர் உதவித் தொகையை திண்டுக்கல் மாவட்டத்திற்கு மட்டும் சுமார் 20 ஆயிரம் பேருக்கு 10 வருடங்களாக அ.தி.மு.க. அரசு நிறுத்தி வைத்தது. மீண்டும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்தவுடன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இதுபோல 100 நாள் வேலைத்திட்டத்தையும், மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு நிறுத்தப் பார்க்கிறது. ஆனால், தமிழக முதல்வர் மத்திய அரசே நிறுத்தினாலும், தமிழகத்தில் தொடர்ந்து 100 நாள் வேலைத்திட்டம் நடைபெற நடவடிக்கை எடுப்பார் என்றார். வளர்ந்து வரும் திண்டுக்கல் நகரின் குடி தண்ணீர் தேவைக்காக தற்போது சுமார் ரூபாய் 700 கோடி மதிப்பில் வைகை அணையிலிருந்து குழாய் மூலம் குடி தண்ணீர் கொண்டுவரப்பட்டு நிலக்கோட்டை, ஆத்தூர், திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் ஆகிய தொகுதிகளுக்கும் குடி தண்ணீர் விநியோகம் செய்ய ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தேர்தல் முடிந்த பின்பு ஒரு மாத காலத்தில் அதற்கான பணிகள் தொடங்கும் என்றார். தமிழக முதல்வர் துணை முதல்வராக இருந்தபோது மகளிருக்கான சுயஉதவிக் குழுக்களை தொடங்கி வைத்தாரோ, அன்றிலிருந்து இன்று வரை பெண்கள் முன்னேற்றங்களுக்கான திட்டங்களைத்தான் செயல்படுத்தி வருகிறார். மகளிர் உரிமைத்தொகை, விடியல் பயணம், காக்கும் கரங்கள். புதுமைப்பெண், போன்ற திட்டங்களை செயல்படுத்திய தமிழக முதல்வர் தேர்தலுக்கு பிறகு அனைத்து மகளிருக்கும் ரூ. 2 ஆயிரம் உரிமைத் தொகை வழங்குவதோடு, ரூ.8 ஆயிரத்திற்கான கூப்பன்களை வழங்கி உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தவுள்ளார். ஆனால், அ.தி.மு.க.வினர் சிவகாசியில் அச்சடித்த போலி காசோலைகளை வழங்கி உங்களை ஏமாற்ற பார்த்தார்கள், நீங்கள் ஏமாறவில்லை. காரணம் திராவிட மாடல் ஆட்சி மூலம் பயனடைந்த உங்களால் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை என்றும் மறக்க முடியாது. இந்த தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமார், நீங்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து உங்களுக்கு உதவக்கூடியவர். அதனால் மறக்காமல் நீங்கள் வாக்களிக்க வேண்டிய சின்னம் உதயசூரியன், உதயசூரியன், உதயசூரியன் என்றார்



**சமூக நீதி அடிப்படையிலான வளர்ச்சி, சமத்துவ நோக்கம் கொண்ட வளம் நிறைந்த எதிர்காலம்**

**இரண்டுக்கும் உத்தரவாதம் ஸ்டாலின்; ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்!**